**செ.வெ.எண்: 444** **நாள்: 07.07.2020**

## முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு புதிய வீடு கட்ட மற்றும் வீடு வாங்க நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு புதிய வீடு கட்ட மற்றும் வீடு வாங்க நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டினை பூர்வீகமாக கொண்ட முப்படைகளில் அவில்தார் மற்றும் அதற்கு இணையான தகுதியில் இராணுவத்திலிருந்து வெளிவந்த பின்னர் மத்திய, மாநில அரசு பொதுத்துறை, அரசு சார் நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றில் நிரந்தர மறுவேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பு பெறாத முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு 2020-21 நிதி ஆண்டு முதல் வங்கி கடன் பெற்று சொந்தமாக புதிய வீடு கட்டுவதற்கு மற்றும் வாங்குவதற்கும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரூ.1,00,000 மானியம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

எனவே தகுதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தை சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் கைம்பெண்கள் புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகி பயன்பெறுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**